RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22229

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# அரசுப்பள்ளி ஆசிரியர்களின் பார்வையில் கல்வி தொலைக்காட்சியின் போக்குகளும் மாணவர்களின் மனநிலையும்

**மோ. கணேசன் [அ, *], பு. சித்ரா [அ]**

[அ] இதழியல் மற்றும் புதிய ஊடகப் புலம், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், சென்னை-600015, தமிழ்நாடு, இந்தியா

# The trends of educational television and the attitude of students from the point of view of government school teachers

**M. Ganesan [a, *], P. Chitra [a]**

[a] School of Journalism and New Media Studies, Tamil Nadu Open University, Chennai-600015, Tamil Nadu, India

* Corresponding Author: moganan@gmail.com

Received: 28-01-2022
Revised: 06-04-2022
Accepted: 16-04-2022
Published: 30-04-2022

Check for updates

## ABSTRACT

Students are the great wealth of a country and the pillars of its future society. Teachers in educational institutions are engaged in the work of carving, polishing, and turning such student wealth into diamonds. Anything to start with needs a strong foundation. Accordingly, it is the schools that provide a strong foundation for the students by introducing them to the alphabet, writing, numbers, other languages, science, and social sciences. The teachers are engaged in teaching the students in these schools. Students should come to school from home, sit in the classroom, and observe the lessons conducted by the teacher. There is a shortage of teachers in many government schools. Many factors, such as lack of teaching, affected the academic performance of the students. As a result, enrollment in government schools has started declining, and enrollment in private schools has started increasing. In such a situation, the students are going through separate classes called tuitions after observing the lessons in the school for marks. With the development of modern technology today, television media is doing its job of educating students all over the world in one place. In such a situation, students, without a teacher, have to learn lessons from where they are. There should be no dropouts. One should learn on one's own rather than attending individual classes called 'tuition.' In 2019, Education TV was launched in Tamil Nadu with the objective of developing their personality skills. It diligently carried out the task of educating schoolchildren through television. It's still doing it today. During the COVID-19 lockdown, students at private schools learned lessons in online classes. It was education television that helped the government school students who were at home. Students are going back to school and studying after the COVID-19 cases subside. The teachers themselves are now teaching in person. How educational television is in today's context? What subjects are given importance in it? The purpose of this article is to examine, from the point of view of government schoolteachers, what kind of change it has brought about among the students.

**Keywords:** School Children, Kalvi Tholaikatchi, Education Channel, Government School Teachers, Uses of Kalvi Tholaikkatchi, Tamil Nadu Education

## முன்னுரை

மக்கள் தொடர்பியலில் ஆயிரம் சொற்கள் பேசுவதை ஒரே ஒரு நிழற்படம் பேசிவிடும். இரண்டாயிரம் சொற்கள் பேசுவதை ஒரு கேலிச்சித்திரம் எளிதாகப் பேசிவிடும். அசைவற்றப் படங்களுக்கே இவ்வளவு வலிமை எனில், அசையும் படங்களைக் காட்டும் தொலைக்காட்சிக்கு எவ்வளவு வலிமை இருக்கும் என்பதை இவ்வுலகம் கண்கூடாகப் பார்த்துகொண்டுதான் இருக்கிறது. அப்படி, 1923ல் உருவான தொலைக்காட்சி எனும் ஊடகமானது, தொடக்க காலத்திலேயே இதழியல் மற்றும் வானொலி ஆகிய மாபெரும் ஊடகங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னே வந்து நின்றது. மக்கள் தொடர்பியலில் புதியதொரு சகாப்தத்தையும் அது படைத்தது. செய்தித்தாள் எனில் படிப்பறிவு இருக்க வேண்டும். வானொலி எனில் கேட்க மட்டுமே செய்ய வேண்டும். ஆனால் தொலைக்காட்சியோ, படிக்கத் தெரியவில்லை என்றாலும் கவலை இல்லை. என்னை நீங்கள் பார்த்தால் மட்டும் போதும். ஒலியோடு உங்களுக்கு நான் அனைத்தையும் எளிதில் புரிய வைத்துவிடுவேன் என்று சொல்லும் வகையாகும். தகவல் பரிமாற்றத்திற்காக உருவான தொலைக்காட்சியானது பின்னாட்களில் பொழுதுபோக்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. பொழுதுபோக்கு, ஆன்மீகம், விளையாட்டு பலதுறைகளில் கால்களைப் பதித்த தொலைக்காட்சியை கல்வியைக் கற்பிக்கவும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

இந்தியாவில் 1959ல் தொலைக்காட்சி கால்பதித்தபோது, தூர்தர்ஷன் என்ற அரசின் தொலைக்காட்சி மட்டுமே அப்போது இருந்தது. அதில் பொழுது போக்கு அம்சங்களுக்கு இடையே, பொதுத்தேர்வின் போது மட்டும் அரை மணி நேரம் கல்விக்காக ஒதுக்கினார்கள். தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் தமிழ் பிரிவான பொதிகையிலும் இதையேதான் பின்பற்றினார்கள். 1990களில் தனியார் தொலைக்காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டபோது, சினிமா, பாடல், பொழுதுபோக்கிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தொலைக்காட்சிகள் உருவாகின. ஆனால் அவற்றில் கல்வி குறித்து எந்த நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகவில்லை. இந்நிலையில் 2019ல் கல்விக்கென்று தனியே ஒரு தொலைக்காட்சியை தமிழ்நாடு அரசு உருவாக்கியது. அந்த வகையில் தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் கல்வி தொலைக்காட்சி மாணவர்களிடமும், அவர்களது பண்புகளிலும் என்ன மாற்றம் செய்திருக்கிறது என்பதை அரசுப்பள்ளி ஆசிரியர்களின் பார்வையில் இருந்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## தொலைக்காட்சியின் வரலாறு

ஐரோப்பிய கண்டத்தில் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான் லோகி பியர்டு (Jhon logie baird) என்பவர், 1926 ஜனவரி 27 அன்று, ராயல் கழகத்தின் உறுப்பினர்களின் முன்னிலையில் தாம் அமைத்த தொலைக்காட்சிக் கருவியை விளக்கிக்காட்டினார் (Kaliyaperumal, 1977). ஜான் லோகி பியர்டினால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைக்காட்சியானது, ஓரிடத்தில் இருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை அவரவர் வீட்டிலிருந்தே காணும் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தது.

1936ல் இங்கிலாந்திலும், 1938ல் பிரான்ஸிலும், 1941ல் அமெரிக்காவிலும் தொலைக்காட்சி அறிமுகமானது. அப்போது ஏற்பட்ட இரண்டாம் உலகப்போரானது தொலைக்காட்சியின் வளர்ச்சியை நான்கு ஆண்டுகளுக்கு குறைத்து அடக்கி வைத்திருந்தது. இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு, தொலைக்காட்சியானது உலக நாடுகளுக்கு பரவ ஆரம்பித்தது. ஆரம்பத்தில் பொழுதுபோக்கிற்காக ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், போகப்போக தகவல்களைத் தெரிந்துகொள்ளவும் பயன்பட்டது. அதற்கென சேனல்களும் உருவாகின. ஆகச்சிறந்த உதாரணம் பிபிசி தொலைக்காட்சி. (Prasad, 2005) 1953-ல் வண்ணத் தொலைக்காட்சி அறிமுகமானபோது அதன் வீச்சு உலகளவில் பரவ ஆரம்பித்தது. 1954ல் வண்ணத்தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை ஆரம்பமாகியது. இதுவே உலகின் வண்ணத் தொலைக்காட்சியாகும் (Aruna Chellathurai, 2008).

## இந்தியாவில் தொலைக்காட்சியின் வரவு

யுனெஸ்கோ அமைப்பின் உதவியோடு செப்டம்பர் 15, 1959ல் இந்தியாவின் தலைநகர் தில்லியில் முதல் தொலைக்காட்சி சோதனை முறையில் இயக்கப்பட்டது. இதன்பிறகு மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்த தொலைக்காட்சி, 1972 அக்டோபர் மாதம் மும்பையிலும், 1973ல் காஷ்மீர், அமிர்தசரஸிலும் (பஞ்சாப்), 1975ல் கல்கத்தா, லக்னோ, சென்னையிலும் தொலைக்காட்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டன (Prasad, 2005).

இப்படி இந்தியாவில் அறிமுகமான தொலைக்காட்சியானது, சினிமா, கலை, இலக்கியம், அரசியல், நாடகம், அன்றாட நிகழ்வுகள் என அனைத்து விதமான நிகழ்வுகளைக் காட்டும் மாபெரும் சக்தி வாய்ந்த ஊடகமாக மாறி இருக்கிறது. உலகெங்கும் நடக்கும் நிகழ்வுகளை இல்லத்திற்கே வந்து காட்டும் மாயக்கண்ணாடியான இந்த தொலைக்காட்சி ஊடகத்தில், 1990கள் வரை இந்திய அளவில் தூர்தர்ஷன் மட்டுமே கோலோச்சியிருந்தது (Ramani Prabha Devi, 2016).

## தனியார் தொலைக்காட்சிகளின் வரவு

1990களில் தனியார் தொலைக்காட்சிகள் உருவாகி வளர ஆடல், பாடல், நகைச்சுவை, சினிமா, நாடகம், செய்திகள் என அனைத்தும் கொடுத்துக்கொண்டிருந்த சேனல்கள், ஒவ்வொன்றிற்கும் தனித்தனி சேனல்களை உருவாக்கின. பாடலுக்கென்று தனி சேனல், நகைச்சுவைக்கென்று தனி சேனல், படத்திற்கென்று தனி சேனல், செய்திகளுக்கென்று தனி சேனல் என ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி சேனல்கள் தற்போது ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன.

## தொலைக்காட்சியில் கல்விக்கான நிகழ்ச்சிகள்

ஆரம்ப காலத்தில் பொதுத்தேர்வின்போது மட்டும் தூர்தர்ஷனில் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். 1961ல் புதுதில்லியில் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பாடங்கள் பரிசோதனை முறையில் ஒளிபரப்பாகின. 1975ல் ஆறு மாநிலங்களில், பள்ளி மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள் பரிசோதனை முறையில் ஒளிபரப்பப்பட்டன. தேசிய அளவில் ஒளிபரப்பான இந்த கல்வி சேனல்களின் கற்பித்தல் மொழி பெரும்பாலும் இந்தியிலும், ஆங்கிலத்திலும் இருந்தன. அவரவர் தாய் (மாநில) மொழிகளில் ஒளிபரப்பாகவில்லை என்பது பின்னடைவுதான் என்றாலும், இந்தியாவில் கல்விக்கென்று தனி சேனலை உருவாக்கியதில் முன்னோடியாக விளங்கியது தூர்தர்ஷன்.

தூர்தர்ஷனானது பொதிகை தொலைக்காட்சி என்ற பெயரில் தமிழில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்து வந்தது. மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் பொதுத்தேர்வுகளின்போது மட்டும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. பின்னாட்களில் கல்விக்கென்றே தனி அலைவரிசைகள் மாநிலங்களிலும், மத்திய அளவிலும் உருவாக்கப்பட்டது.

## வித்யா தொலைக்காட்சி

2016ல் பஞ்சாப் மாநிலத்தின் கல்வித்துறை அமைச்சராக இருந்த தல்ஜித்சிங் சீமா, வித்யா தொலைக்காட்சியை, அம்மாநில நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்காக கொண்டுவந்தார். போட்டித்தேர்வுகளுக்கு நடுநிலைப்பள்ளி மாணவர்களை தயார் செய்யும் விதமாக, இந்த தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் அமைந்தன. மேலும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளையும் இந்த தொலைக்காட்சி வழங்கியது (ITWD, 2019).

## ஸ்வயம் பிரபா

ஜூலை 9, 2017ல் அன்றைய மத்திய அரசு ஸ்வயம் பிரபா என்றொரு திட்டத்தை கொண்டுவந்தது. இந்த திட்டத்தின்மூலம் ஜிசாட்-15 செயற்கைக்கோளைப் பயன்படுத்தி 32

தொலைக்காட்சி அலைவரிசைகளை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக்கொள்ள அனுமதி அளித்தது (ITWD, 2019).

## க்யான் தர்ஷன்

2000-மாவது ஆண்டில் 24 மணி நேரமும் இயங்கும் 'கியான் தர்ஷன்' எனும் கல்வி தொலைக்காட்சியை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம் மற்றும் பிரசார் பாரதி ஆகிய மூன்றும் இணைந்து இந்தியாவில் உருவாக்கின. இதனை நடத்தும் பொறுப்பு இந்திராகாந்தி திறந்தநிலை பல்கலைக்கழகத்திடம் ஒப்பட்டைக்கப்பட்டது. இந்த தொலைக்காட்சியானது தொடக்கப்பள்ளி மாணவர்கள் முதற்கொண்டு பல்கலைக்கழக மாணவர்கள் வரை பயன்பெறும் வகையில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது (Ignou, 2020).

## கல்வித் தொலைக்காட்சி

தொலைக்காட்சி ஒளிபரப்பில் செயற்கைக்கோள் தொழில்நுட்பம் வளர்ந்ததும் சேனல்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் கல்விக்கென்றே தாய்மொழித் தமிழில் 'கல்வி தொலைக்காட்சி' என்ற சேனலை உருவாக்கிய பெருமை தமிழ்நாடு அரசையே சாரும். 2014ம் ஆண்டிலேயே அன்றைய முதல்வராக இருந்த ஜெயலலிதா, கல்வி தொலைக்காட்சியை தமிழ்நாடு அரசு தொடங்கும் என்று அறிவித்தார். சில காரணங்களால் அது அப்போது நடக்காமல் போனாலும் 2017-18 பள்ளிக்கல்வி மானியக் கோரிக்கையின் போது, கல்வி தொலைக்காட்சி குறித்து அறிவிப்பு செய்யப்பட்டது.

சென்னை, கோட்டூர்புரத்தில் இருக்கும் அண்ணா நினைவு நூற்றாண்டு நூலகத்தின் எட்டாவது தளத்தில் இருந்தபடி, 2019 ஆகஸ்ட் 26 அன்று தனது ஒளிபரப்பை தொடங்கியது கல்வி தொலைக்காட்சி. தொடக்க காலத்தில் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலான இந்த ஒளிபரப்பில் என்னென்ன நிகழ்ச்சி எனப் பெரிய பட்டியல் அரசுத் தரப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில், கதை களஞ்சியம், கல்வி உலா, கார்ட்டூன், ஆங்கிலம் பழகுவோம், வேலைவாய்ப்புச் செய்திகள், கலைத்தொழில் பழகு, கைத்தொழில் கற்றுக்கொள்வது, சூப்பர் டேலன்ட்ஸ் என மாறுபட்ட நிகழ்ச்சிகளை கல்வி தொலைக்காட்சி அளித்தது (Saravanan, 2019).

கொரோனா பெருந்தொற்றால் பள்ளிகள் 2 ஆண்டுகள் மூடப்பட்டிருந்தபோது, 1 முதல் 12 வகுப்பு வரையிலான பாடங்களை தொலைக்காட்சி வழியாக நடத்தி சாதனை படைத்தது. கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா தாக்கம் காரணமாக பள்ளிகள் மூடப்பட்ட நேரத்தில், கல்வி தொலைக்காட்சி அரசு பள்ளி மாணவ-மாணவிகளுக்கு பேருதவியாக இருந்தது. அந்த காலகட்டத்தில் தனியார் பள்ளி மாணவ-மாணவிகள் ஆன்லைன் வாயிலாக தங்களது கற்றலை வலுப்படுத்தி வந்த நிலையில், அரசு பள்ளி மாணவர்களுக்கு இருந்த ஒரே வாய்ப்பு கல்வி தொலைக்காட்சி தான். அதன் வாயிலாகவும், கல்வித்துறையின் சீரிய முயற்சியாலும் மாணவர்களின் கற்றல் ஓரளவுக்கு தாக்குப்பிடித்தது. ஆரம்பத்தில் 2 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவ-மாணவிகளுக்கு பாடங்கள் ஆசிரியர்களை கொண்டு வீடியோவாக பதிவேற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஒளிபரப்பப்பட்டன. சனிக்கிழமைகளில் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கான பயிற்சி வினாக்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் இசை, மனநல ஆலோசனை உள்பட துணைக்கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டன. இதன் மூலம் பள்ளி மாணவர்கள் பயன் அடைந்ததையும் பார்க்க முடிந்தது.

தற்போது கொரோனா தொற்று முடிந்துவிட்டதால் மாணவர்கள் நேரடி முறையில் பள்ளிக்கு சென்று படித்து வருகின்றனர். இந்நிலையில் கல்வி தொலைக்காட்சி மாணவர்களிடம் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களது கற்றல் திறனை அதிகரித்திருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அறிந்து கொள்ளவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

## ஆய்வு முறையும் ஆய்வின் எல்லையும்

நேர்காணல் ஆய்வு முறை இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டிருக்கிறது. கல்வி தொலைக்காட்சியின் பார்வையாளர்கள் மாணவர்கள் மட்டுமே. தனியார் பள்ளி மாணவர்கள் இணைய வழியில் பாடங்களை கற்றுக்கொண்டனர். அரசுப்பள்ளி மாணவர்கள் மட்டுமே வீட்டில் இருந்தபடி கல்வி தொலைக்காட்சியின் வழியே கற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு அரசுப்பள்ளி ஆசிரியர்களே பாடம் நடத்தினார்கள். மாணவர்கள் எப்படி கற்றுக்கொண்டார்கள். அவர்களின் கற்றலடைவு எந்த அளவில் இருக்கிறது. அவர்கள் எந்த அளவிற்கு அந்த பாடங்களைப் படித்து புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்களே மதிப்பிடுகிறார்கள். எனவே அரசுப்பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே இந்த ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 1 முதல் 12ம் வகுப்பு வரை மாணவர்கள் இருப்பதால், 1முதல் 5ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் ஆசிரியர் ஒருவர், 6 முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் ஆசிரியர் ஒருவர், 9 மற்றும் பத்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் ஆசிரியர் ஒருவர், 11 மற்றும் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் ஆசிரியர் ஒருவர் வீதம் நேர்க்காணல் செய்யப்பட்டுள்ளது.

1 முதல் 5ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் சொல்லித்தரும் புதுக்கோட்டையைச்சேர்ந்த அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியை வான்மதியிடம், கல்வி தொலைக்காட்சியின் இன்றைய போக்குகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, "பெரிதாக பயனில்லை. கிராமங்களில் மின்சாரம் இருக்காது. ஸ்மார்ட் வகுப்பறை கிடையாது. மாணவர்கள் வீட்டில் பார்க்க விரும்புவதில்லை. ஒரு வாரம் நடத்த வேண்டிய பாடத்தை, அதாவது கிட்டத்தட்ட 6 மணி நேரம் நடத்தவேண்டிய பாடத்தை அரை மணி நேரத்தில் நடத்துகிறார்கள்" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் அதிகமாக எந்த பாடப்பிரிவுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்? வேறு எந்த பாடங்களுக்கு தர வேண்டும்? என்று கேட்டதற்கு "கருத்து இல்லை" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் பாடம் நடத்துகிற உத்தி எப்படி இருக்கிறது? இன்னும் வேறு எப்படி இருக்க வேண்டும்? என்று அவரிடம் கேட்டதற்கு, "ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு உத்தி. அந்தந்த பகுதி மாணவர்க்கு ஏற்றாற்போல் அது மாறுபடும். ஒருவர் நடத்தும் முறையையே அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பது சலிப்பைத் தரும். சரியாகவும் வராது. பலருடைய புதுமை வெளிப்படாது" என்றார்.

கல்வி தொலைக்காட்சியினால் மாணவர்களிடம் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? என்று கேட்டதற்கு, "ஒன்றுமே இல்லை. உயர் வகுப்பில் எனக்கு தெரியாது. ஆசிரியர் மாணவர் நேரிடையான கற்றல் கற்பித்தலே சரியானது. இயந்திரத்தில் ஒலிப்பதை பார்த்து கற்றுக்கொள்வது போதுமென்றால், மாணவர் மனநிலையை உணராது உளவியல் அறிய முடியாது" என்றார்.

இவரது கருத்துகளை பகுத்தறிந்து பார்க்கும்போது, ஒன்று முதல் 5ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கல்வித்தொலைக்காட்சி எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. நேரடியாக கல்வி கற்பதே சிறந்த முறையாகும் என்கிறார்.

கோபிசெட்டிபாளையத்தில் 5 முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் மகேஸ்வரியிடம் இதே கேள்விகள் கேட்கப்பட்டன.

கல்வி தொலைக்காட்சியின் இன்றைய போக்குகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, "கல்வி தொலைக்காட்சி கொரோனா காலத்தில் மாணவர்களுக்கு பெரிய துணையாக இருந்தது. ஆனால் இன்றைய போக்கு என்று கூறும் பொழுது, மாணவர்கள் பள்ளியிலேயே அனைத்தையும் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் கல்வி தொலைக்காட்சியை பெரும்பாலும் பார்ப்பது இல்லை" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் அதிகமாக எந்த பாடப்பிரிவுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்? வேறு எந்த பாடங்களுக்கு தர வேண்டும்? என்று கேட்டதற்கு, "எனக்கு தெரிந்த அளவில், அனைத்து பாடங்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆங்கிலப் பாடத்தினைப் பொறுத்தவரையில், District accent

கலந்து வருவதால் அதனை தவிர்த்து பாடங்கள் ஒளிபரப்பலாம் என்பது என் தனிப்பட்ட கருத்து" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் பாடம் நடத்துகிற உத்தி எப்படி இருக்கிறது? இன்னும் வேறு எப்படி இருக்க வேண்டும்? என்று அவரிடம் கேட்டதற்கு, "நன்றாக உள்ளது. ஒரு சில பாடங்களை நடத்திய ஆசிரியர்கள் மிகவும் இறுக்கமான முகத்தினை கொண்டு நடத்தினர். அவர்கள் இன்முகத்தோடு நடத்தலாம். மேலும் தமிங்கிலத்தில் இன்னும் தெளிவாக நடத்தலாம்" என்றார்.

கல்வி தொலைக்காட்சியினால் மாணவர்களிடம் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? என்று கேட்டதற்கு, "என்னை பொறுத்த வரையில் தற்பொழுது அது பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது என்று கூற இயலாது" என்றார்.

இவரது கருத்துகளை பகுத்தறிந்து பார்க்கும்போது, ஒன்று முதல் 6 முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கல்வித்தொலைக்காட்சி எல்லா பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நடத்தப்பட்டாலும், அது எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்கிறார்.

மதுரையில் 9 முதல் 10ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் மதுசூதனனிடம் இதே கேள்விகள் கேட்கப்பட்டன.

கல்வி தொலைக்காட்சியின் இன்றைய போக்குகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, "கடமைக்கு ஒளிப்பரப்பாகிறது. பார்ப்பதற்கு ஆள் இல்லை. ஆனால் ஆரம்பித்த நோக்கம் வேறு. நாளை நடத்த இருக்கும் பாடங்களை இன்று இரவு, யாரோ ஒரு நல்லாசிரியர் நடத்த, அதைப் பார்த்து அதனுடன் நம் திறனையும் கூட்டி நடத்துவதற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் பாடங்கள் வரிசை முறையில் இல்லை. ஏதோ இயங்க வேண்டும் என்று இயங்குகிறது. பல ஆசிரியர்கள் கல்வித் தொலைக்காட்சியில் நடத்திய பாடங்கைளக் காணவில்லை. ஒரு வரிசை முறை இல்லை. உடன் ஒரு பாடத்தை தேட முடியவில்லை. மாணவர்களுக்கு போதிய விழிப்புணர்வு தர வில்லை" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் அதிகமாக எந்த பாடப்பிரிவுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்? வேறு எந்த பாடங்களுக்கு தர வேண்டும்? என்று கேட்டதற்கு, "தமிழ்ப்பாடங்களை மட்டுமே பார்த்திருக்கிறேன். இலக்கணத்திற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும்" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் பாடம் நடத்துகிற உத்தி எப்படி இருக்கிறது? இன்னும் வேறு எப்படி இருக்க வேண்டும்? என்று அவரிடம் கேட்டதற்கு, "வகுப்பறையில் மாணவர்களோடு நடத்துவது போல அமைய வேண்டும். தனியாளாக நடத்துவது சலிப்பைத் அடிக்கிறது. ஓர் உணர்ச்சி இல்லை" என்றார்.

கல்வி தொலைக்காட்சியினால் மாணவர்களிடம் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? என்று கேட்டதற்கு, "என்றாவது எப்படியாவது நாம் அந்த டிவியில் வந்தால் நிறுத்தி பார்த்துவிட்டு, அடுத்தநாள் "சார் உங்கள பார்த்தேன்" என்கிறார்கள். மற்றபடி வேறு எந்த மாற்றமும் இல்லை" என்றார்.

இவரது கருத்துகளை பகுத்தறிந்து பார்க்கும்போது, ஒன்று முதல் 9 முதல் 10ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கல்வித்தொலைக்காட்சி எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. தொலைக்காட்சியில் பாடம் நடத்துவதைவிட நேரில் கல்வி கற்பதே சிறந்த முறையாகும் என்கிறார்.

சேலத்தில் 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கு பாடம் நடத்துகின்ற ஆசிரியர் மலர்கொடியிடம் இதே கேள்விகள் கேட்கப்பட்டது.

கல்வி தொலைக்காட்சியின் இன்றைய போக்குகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, "சில பாடங்களின் நேரம் மாணவர்கள் உறங்கும் நேரத்தில் உள்ளது. அது உதவாது. எந்த அடிப்படையில் கால அட்டவணை போடப்பட்டது என்று தெரியவில்லை. அப்போதும் சில பகுதிகளில் மாணவர்கள் பார்க்கவில்லை." என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் அதிகமாக எந்த பாடப்பிரிவுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்? வேறு எந்த பாடங்களுக்கு தர வேண்டும்? என்று கேட்டதற்கு, "பொதுப் பிரிவுக்கு முக்கியத்துவம்

கொடுக்கிறார்கள். தொழிற்கல்வி பாடப்பிரிவில் பல பாடங்களில் சிலவற்றிற்கு கொடுக்கப்படும் நேரம் சரியில்லை" என்றார்.

கல்வி தொலைக்காட்சியில் பாடம் நடத்துகிற உத்தி எப்படி இருக்கிறது? இன்னும் வேறு எப்படி இருக்க வேண்டும்? என்று அவரிடம் கேட்டதற்கு, "உத்தி பரவாயில்லை. இது ஆரம்பம்தானே பரவாயில்லை!" என்றார்.

கல்வி தொலைக்காட்சியினால் மாணவர்களிடம் என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது? என்று கேட்டதற்கு, "மாற்றம் எதுவுமில்லை" என்றார்.

இவரது கருத்துகளை பகுத்தறிந்து பார்க்கும்போது, 11 மற்றும் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு கல்வித்தொலைக்காட்சி எந்த வகையிலும் உதவவில்லை, அது எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்கிறார்.

## முடிவுரை

ஒரு காலத்தில் மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதால் கெட்டுப்போகிறார்கள் என்ற நிலை இருந்தது. இன்றோ அந்த நிலை மாறிவிட்டது. வீட்டிலிருந்தபடியே கல்வி கற்கவேண்டுமா? இதோ இருக்கிறது கல்வி தொலைக்காட்சி என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு அரசின் கல்வி தொலைக்காட்சி கொண்டுவரப்பட்டது. இடைநிற்றலைத் தவிர்ப்பதற்காகவும், ஆசிரியரின் நேரடி உதவியின்றி மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கும், அவர்களுடைய தகுதிகளை, திறன்களை, பண்புகளை மேம்படுத்துவதற்காகவும் இத்தொலைக்காட்சி உருவாக்கப்பட்டது. கொரோனா தொற்றுகாலத்தில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இந்த கல்விதொலைக்காட்சி பயனுள்ளதாக இருந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. ஆனால், கல்வி தொலைக்காட்சி தொடங்கிய காலத்தில் அரசு கேபிள் தொலைக்காட்சி இணைப்பு வைத்திருப்பவர்களிடம் மட்டுமே இந்த அலைவரிசை ஒளிபரப்பானது. பிற தனியார் டிஜிட்டல் வடிவ தொலைக்காட்சி இணைப்பாளர்களான ஏர்டெல், டாடா ஸ்கை போன்றவர்களின் இணைப்பில் இந்த கல்வி தொலைக்காட்சி ஒளிபரப்பப்படவில்லை. நிறைய கிராமப்புற மாணவர்களின் வீட்டில் மின்சார வசதிகள் இல்லை. அப்படியே இருந்தாலும் தொலைக்காட்சி பெட்டி இல்லை. அப்படியும் தொலைக்காட்சி பெட்டி இருந்தாலும், அடிக்கடி மின் துண்டிப்பு பிரச்சனை இருந்தது. இதனால் கிராமப்புற மாணவர்கள் மட்டுமின்றி நகர்ப்புற மாணவர்களும் பாதிக்கப்பட்டார்கள். இப்படி தொழில்நுட்ப பிரச்சனைகள் ஒருபுறம் இருந்தது. ஆசிரியர்கள் மாணவர்கள் நேரடி வகுப்பு முறை அங்கே காணாமல் போனது. மாணவர்கள் பாடத்தை கவனிக்கிறார்களா? அவர்களுக்கு சந்தேகம் இருக்கிறதா? அப்படி சந்தேகம் இருப்பின், உடனே தீர்த்து வைக்கும் சூழல் எல்லாம் நேரடி வகுப்பில் சாத்தியமாக இருந்தது. தொலைக்காட்சி வழி வகுப்பில் அவை எல்லாம் காணாமல் போய்விட்டன. மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களிடம் நேர்காணல் செய்தபோது கல்வி தொலைக்காட்சியால் மாணவர்களிடம் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. கற்றல் திறனும் அதிகரிக்கவில்லை. ஏதோ கடமைக்கு பாடம் நடத்துவது போல, உணர்ச்சியற்ற நிலையிலேயே கல்வி தொலைக்காட்சியில் ஆசிரியர்கள் பாடம் நடத்துகிறார்கள் என்பது தெரியவருகிறது. பள்ளி சென்றுவிட்டு வீடு திரும்பும் மாணவர்களுக்கு இந்த்தொலைக்காட்சியைப் பார்க்க நேரம் ஏது? என்ற ஒரு கேள்வி எழுகிறது. நிகழ்ச்சிகளின் அட்டவணைகளோ மாணவர்களுக்கு ஏற்றாற்போல இல்லை. மாணவர்களை நேரடி முறையில் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களின் இந்த கூற்றுகளை நாம் புறந்தள்ளிவிட முடியாது. இன்றைய மாணவர்களுக்கு நாம் என்ன கற்றுத்தருகிறோமோ அதுதான் நாளைய சமுதாயத்தினை கட்டமைப்பதற்கான அடித்தளமாகும். சரியான முறையில், பயனுள்ள முறையில் மாணவர்களுக்கு கல்வி தொலைக்காட்சி கற்பித்தால் மட்டுமே, தனிப்பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்ல மாட்டார்கள். படிப்பில் கவனம் செலுத்துவார்கள். அவர்களது திறன்களை வளர்த்துக்கொள்வார்கள். மாணவர்களுக்கு பாடம் நடத்துவது புரியவில்லை எனில் உடனே பொழுதுபோக்கு தொலைக்காட்சியை பார்க்கத் தாவி விடுகிறார்கள். கல்வி சார்ந்து மாணவர்களின் மனநிலையில் எந்த மாற்றத்தையும், தாக்கத்தையும் தற்போதிருக்கும் கல்வித்தொலைக்காட்சியும் அதன் நிகழ்ச்சிகளும் ஏற்படுத்தவில்லை என்பதை அறியமுடிகிறது. எல்லா அலைவரிசை

ஒளிபரப்பாளர்களும் கல்வி தொலைக்காட்சியை கட்டாயமாகத் தரவேண்டும். இலவச அலைவரிசையாகத் தரவேண்டும். மாணவர்களின் ஓய்வு நேரமான மாலை 6 முதல் 8.30 வரையில்தான் கல்வி தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும். அதுவும் 8,10,11,12ம் வகுப்பு மாணவர்களுக்கு, அதாவது பொதுத்தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கு நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும். பல்வேறு கற்பித்தல் உபகரணங்களோடு, மாணவர்களுக்கு பல்வேறு திரைக்காட்சிகளின் வழியாக பாடங்களை கற்பிக்க வேண்டும். நிகழ்ச்சி தயாரிப்பு, ஒளிபரப்பு, பாடம் கற்பிக்கும் முறை மாணவர்களுக்கு ஏற்றாற்போல எளிமையான, எளிதில் பார்க்கும் வகையில் அமைய வேண்டும். இல்லையெனில் இந்த கல்விதொலைக்காட்சி தொடங்கியதன் நோக்கத்தை அடையாமல் கடமைக்குதான் இயங்க வேண்டிய சூழல் ஏற்படும். கல்வி தொலைக்காட்சி குறித்து வகுப்பு வாரியாக, பாட வாரியாக ஆசிரியர்களிடம் ஆய்வு நடத்தினால் இன்னும் விரிவான தகவல்கள் கிடைக்கும். பள்ளி மாணவர்களிடம் ஆய்வு நடத்தலாம். வருங்காலத்தில் கல்வி தொலைக்காட்சி குறித்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்படவேண்டும். அப்படி செய்யும்பட்சத்தில் இதன் சாதக, பாதக அம்சங்கள் தெரியவரும். அதன் அடிப்படையில் கல்வி தொலைக்காட்சியை மேம்படுத்த முடியும்.

## References


Aruna Chelladurai (2008), Television News (Technologies and Training), (First Edition), Aruna Publications, Kolumbu, Srilanka

Ignou, (2020) Broadcast at IGNOU- Gyan Darshan – Introduction, Accessed on: http://ignou.ac.in/ignou/aboutignou/broadcast/2

ITWD, (2019) Tamil Nadu government launches education TV channel 'Kalvi Tholaikkatchi', India Today, https://www.indiatoday.in/education-today/news/story/tamil-nadu-government-launches-education-tv-channel-kalvi-tholaikkatchi-1591655-2019-08-26

Kaliyaperumal, M. (1977), Television, (First Edition), Tamilnadu Text book Corporation, Chennai, India.

Prasad, B.K. (2005) Media and Social Life in India, (First Edition) Anmol Publications Pvt Limited, New Delhi, India

Ramani Prabha Devi, K.S. (2016) 1990-kalil Piranthavarkal Asirvthikappattavarkal Een?, Hindhu Tamil Thisai, https://www.hindutamil.in/news/blogs/69813-1990.html

Saravanan, V.S. (2019) Kalvi Tholaikatchiyil Evaiyellam Edam Peralame, Sila Ethiparpukal, Vikatan, https://www.vikatan.com/government-and-politics/education/educationists-discuss-about-the-new-kalvi-television


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License